வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 11.06.2026 வியாழக்கிழமை | இதழ் : 156 | பக்கங்கள் : 08

## தேவாலயங்களை உளவு பார்த்தார் சுரேஷ் சாலே!

கொழும்பு, ஜூன். 11

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு 3 வாரத்துக்கு முன்னர் சுரேஷ் சாலே, நீர்கொழும்பு பகுதிக்கு நான்கு பேரை அனுப்பி கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் விசேட பூசையில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை திரட்டியுள்ளமை

07

11 பேர் கடத்தப்பட்டு காணாமற்போனமை;

## முன்னாள் கடற்படைத் தளபதி விஜேகுணரத்ன சந்தேக நபர்!

கொழும்பு, ஜூன். 11


2008-2009 காலப்பகுதியில், கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 11 பேர் கடத்தப்பட்டு, வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி ரவீந்திர விஜேகுணரத்ன மீண்டும் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

07

கோட்டாவுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டதிலிருந்து

# விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்துள்ளார் சுரேஷ் சாலே!

### சபையில் தகவல் வெளியிட்டார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, ஜூன். 11

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்ட நாள் முதல், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி துவான் சுரேஷ் சாலே விசாரணைகளுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்வதுடன் உணவுத்தவிர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், இது தொடர்பாக மேலும் குறிப்பிட்டதாவது:

"உயிர்த்த ஞாயிறு

07

## பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டிருப்பின் அதை யுத்தக்குற்றமாக விசாரிக்கவேண்டும்



### சபையில் ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, ஜூன். 11

ஜே.வி.பி.தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டபோது அவரது மகன் கொல்லப்படவில்லை. சஹ்ரான் உயிரிழந்தபோதும் அவரது மகள் பாதுகாப்பாக இருக்கின்றார். அப்படியானால் பிரபாகரன் கொல்லப்பட்டபோது மட்டும் ஏன் அவரின் மகனான சிறுவன் பாலச்சந்திரன் கொல்லப்படவேண்டும். யுத்த காலத்தில் அவ்வாறு இடம்பெற்றிருந்தால், அது யுத்தக் குற்றமாக கருதி விசாரிக்கப்பட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

07

## பயங்கரவாத தடைச் சட்டத்தை தாமதிக்காமல் இரத்துச் செய்க!

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஜூன். 11

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கைது மற்றும் தடுப்புக்காவல்கள் குறித்து கவலை வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு உடனடியாக இடைக்காலத் தடை விதிக்கவேண்டும் என்பதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை மேலும் தாமதமின்றி இரத்துச் செய்ய வேண்டும்" என்று அந்தச் சபை மேலும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்த அமைப்பு-

"தற்போதைய அரசாங்கம் இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்திருந்த போதிலும், சர்வதேச மனித உரிமைச்

07

## சங்கீத்ஷனை விடுதலை செய்!

### ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம்




கொழும்பு, ஜூன். 11

சொல்லிசைப் பாடகரான கணேஸ்குமார் சங்கீதன் என்பவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும், பல தசாப்தங்களாக நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரியும் நேற்று ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது பலத்த எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் "பயங்கரவாத ஒடுக்குமுறைச் சட்டங்கள்

07

## மாகாண தேர்தலை ஒத்திவைத்த தரப்பு 'சிஸ்டம் சேஞ்' குறித்து பேசுவது சிறப்பு!

### ரவிக்கு பிரதமர் ஹரிணி அதிரடி பதில்

கொழும்பு, ஜூன். 11

தேர்தல்களை ஒத்திவைக்கும் கலாசாரத்தைக் கொண்ட தரப்பினர் இன்று 'சிஸ்டம் சேஞ்' பற்றிப் பேசுவது நல்ல தொரு அறிகுறி என பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இந்த பதிலை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க,

கடந்த தேர்தலில் 53 இலட்சம் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டினார்.

07

## ஷான் விஜயலால் விளக்கமறியலில்!

கொழும்பு, ஜூன். 11

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்ட தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி வரை

07

## இயக்குநர் இமயம் பாரதிராஜா உடல்நலக்குறைவால் மறைவு!



கொழும்பு, ஜூன். 11

இயக்குநர் இமயம் என இரசிகர்களால் அழைக்கப்படும் பாரதிராஜா உடல்நலக் குறைவு காரணமாகச் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 84. அவரது மறைவு திரையுலகினரையும், ரசிகர்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

07

## சங்கீத்சன் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியுடன் சிறீதரன் பேச்சு

கொழும்பு, ஜூன். 11

சொல்லிசைக் கலைஞரான சங்கீத்சனின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் நடைபெற்றுள்ளது.

குறித்த உரையாடலுக்கு அமைவாக, சங்கீத்சனுக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படாமையின்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 31 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டுக்குள் நியமனம்!

## கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 11

இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் நிலவும் கடுமையான ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில், இந்த ஆண்டுக்குள் 31 ஆயிரத்துக்கும் அதிகமான புதிய ஆசிரியர்களைப் பணியில் இணைத்துக்கொள்வதற்குக் கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

கல்வியியல் இளமாணிப் பட்டம் பெற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கான விசேட அனுமதியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நியமனப் பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாண சபைகள் மட்டத்தில் முழுமையாக நிறைவு செய்யப்படவுள்ளன.


இதற்கமைய, அண்மையில் நடத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைகளின் முடிவுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளதுடன், அதன் அடிப்படையில் 23006 பேர் புதிய ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களில் 15ஆயிரம் பேர் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும், எஞ்சியவர்கள் திறந்த பரீட்சை மூலமும் உள்வாங்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும், எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் 6500 டிப்ளோமாதாரர்களும் ஆசிரியர் சேவைக்குள் இணைக்கப்படவுள்ளனர்.

தற்போது நாடளாவிய ரீதியில் 44 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவி வரும் பின்னணியில், இந்த ஆண்டுக்குள்ளேயே 31ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களைப் புதிதாகப் பணியமர்த்தக் கல்வி அமைச்சு திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளது. (அ)

# எதிர்க்கட்சி தலைவர் சஜித் - அமெரிக்கத் தூதுக் குழு சந்திப்பு!



கொழும்பு, ஜூன். 11

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அமெரிக்க தூதுக் குழுவினருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று நடை பெற்றது.

பாராளுமன்றத்திலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப் பின்போது, இரு தரப்பினரிடையேயான பாராளுமன்ற ஒத்துழைப்பு, ஜனநாயக ஆட்சி, சட்டவாக்க செயல்முறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டன.

அத்துடன், இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையில் நீண்ட காலமாக நிலவிவரும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

அரச கொள்கை அபிவிருத்தியாக்கம் மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் சமகால அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் தொடர்பிலும் இரு தரப்பினரிடையே விரிவான கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றுள்ளது. (அ)

# அத்துமீறித் தோட்டத்துக்குள் நுழைந்த நபரை சுட்டுக்கொன்ற காவலாளிகள்!

கொழும்பு, ஜூன். 11

வனாத்தவில்லு பகுதியில் உள்ள முந்திரித் தோட்டம் ஒன்றில் நபர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்

இதில் கல்லடிப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கரதிவ் பகுதியில் உள்ள பெருந்தோட்ட நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான முந்திரித் தோட்டத்தில் முந்திரி பறிக்கச் சென்றபோது, அங்குள்ள காவலாளிகளிடம் சிக்கியுள்ளார்.

இதன்போது அவர்கள் அவரைத் தாக்கி எயார் ரைபிள் எனச் சந்தேகிக்கப்படும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளமை இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த 8 காவலாளிகள் 4 எயார் ரைபிள் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட புத்தளம், கற்பிட்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# 18 அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைக்க தீர்மானம்

கொழும்பு, ஜூன். 11

லங்கா சதொச ஊடாக 18 அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடியால், சர்வதேச சந்தையில் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் அதிகரித்து வரும் பின்னணியில், உள்நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் 18 அத்தியாவசிய பொருள்களின் விலைகளை, புறக்கோட்டை மொத்த சந்தை விலையை விடவும் குறைந்த விலையில் வழங்குவதற்குத் தேவையான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு விலை குறைக்கப்பட்டுள்ள 18 அத்தியாவசிய உணவுப் பொருள்களுள் பெரிய வெங்காயம், வெள்ளைச் சீனி, பருப்பு, தட்டப்பயறு , கடலை, பாசிப்பயறு, நிலக்கடலை, கோதுமை மா, சிவப்பு அரிசி , சிவப்பு நாடு அரிசி, சம்பா அரிசி, வெள்ளை நாடு அரிசி மற்றும் பொன்னி சம்பா அரிசி ஆகியன உள்ளடங்குவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதைக் கருத்திற்கொண்டு, மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கப் பொறிமுறையை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாட்டவர்களை ஏமாற்றி பணம் பறித்த கும்பல் சுன்னாகத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன். 11

புலம்பெயர் தேசத்தில் இருந்து வருபவர்களிடமும் ஏனையோரிடமும் இருந்து ஏமாற்றி பணம் மற்றும் நகைகளை பறித்த ஒரு கும்பலைச் சேர்ந்த மூவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தக் குழுவில் கணவன், மனைவி மற்றும் மச்சான் ஆகியோர் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து வருபவர்களை ஆசை வார்த்தை கூறி குறித்த பெண் ஒரு வீட்டுக்கு அழைத்துச்செல்வார். இதன் போது அவ் இடத்துக்கு வரும் கணவனும் அவரது மச்சானும் குறித்த இடத்துக்குச் சென்று காணொளி பதிவு செய்து அவர்களை மிரட்டிப் பணம் மற்றும் நகை என்பவற்றை அபகரித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இதே பாணியில் ஒரு சம்பவம் இடம் பெற்ற நிலையில் அது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் அந்த குழுவினரை சுன்னாகம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு எதிராக ஏற்கனவே முறைப்பாடுகள் இருப்பதாகவும், அவர் போதைக்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-05)

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள மோசடி; விசேட தணிக்கை அறிக்கை சட்டமா அதிபருக்கு

கொழும்பு, ஜூன். 11

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் பெருமளவிலான நிதி முறைகேடுகள் மற்றும் மோசடிகள் தொடர்பான கணக்குக் குழுவின் விசேட தணிக்கை அறிக்கையை, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகச் சட்டமா அதிபருக்கு நேரடியாக அனுப்புவதற்கு பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்றக் குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட அறிக்கை ஒன்று, தன்னாதிக்க விசாரணை மற்றும் சாத்தியமான குற்றவியல் வழக்காடல்களுக்காகச் சட்டமா அதிபருக்கு நேரடியாக மாற்றப்படுவது பாராளுமன்ற வரலாற்றிலேயே இதுவே முதல் முறை என்ற வரலாற்றுச் சாதனை பதிவாகியுள்ளது.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் போது, கடந்த 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் அரசாங்கக் கணக்குக் குழுவினால் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் நேரில் அழைக்கப்பட்டு, இந்த நிதி முறைகேடுகள் குறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கணக்காய்வாளர் நாயகத்தின் தணிக்கை அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த அதிர்ச்சித் தகவல்களின் அடிப்படையிலேயே இந்தக் குழுநிலை விசாரணைகள் நடத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது பாராளுமன்றத்தின் முழுமையான அங்கீகாரத்துடன் இந்த ஊழல் கோப்பு சட்டமா அதிபர் திணைக்களத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# பசிபிக் பெருங்கடலில் “எல் நினோ;” இலங்கை வானிலையில் மாற்றம்

கொழும்பு, ஜூன். 11

பசிபிக் பெருங்கடலில் உருவாகியுள்ள “எல் நினோ” காலநிலை மாற்றத்தின் தாக்கம், எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இலங்கையின் வானிலையில் பிரதிபலிக்கத் தொடங்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த நிலைமையானது இலங்கைக்குப் பருவமழையைக் கொண்டுவரும் தென்மேல் பருவப்பெயர்ச்சிப் பொறிமுறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

பசிபிக் பெருங்கடலில் ஏற்கனவே தீவிரமடைந்துள்ள இந்த எல் நினோ காலநிலை மாற்றத்தின் விளைவுகள், பல்வேறு அளவுகளில் சுமார் 11 மாதங்கள் வரை தொடர்ச்சியாக நீடிக்க வாய்ப்புள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
11.06.2026 வியாழக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## “ஹிப்ஹொப்” சங்கீத் விவகாரமும் தமிழ் அரசியல்வாதிகளின் எதிர்வினையும்

சாவகச்சேரியில் இசை நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளை புகழ்ந்து பாடியதாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்த இசைக் கலைஞர் ஹிப்ஹொப் சங்கீ என்று அறியப்படும் சங்கீதசன் கணேஸ்குமாரை விடுதலை செய்யக் கோரி போராட்டம் நடத்தும் தமிழ் (தேசியவாத) அரசியல் வாதிகள் தெரிவித்துவரும் கருத்துக்கள் இன்றைய தமிழர் அரசியலின் திரிசங்கு நிலையை வெளிக்காட்டுகின்றன. இவர்கள் தாங்கள் பேசுகின்ற விடயங்களை சாதிப்பதற்கு நடைமுறையில் ஒரு சிறு ". துரும்பைக்கூட எடுத்து வைக்க முன்வரப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

சங்கீதசன் விடுதலை செய்யப்படாவிட்டால் வடக்கு. கிழக்கில் தமிழ் மக்கள் மாபெரும் போராட்டத்துக்கு தயாராகிவருகிறார்கள் என்று ஒருவரும் " வடக்கு, கிழக்கில் போய்க் கேட்டுப் பாருங்கள் விடுதலை புலிகள் மீண்டும் வரவேண்டும் என்றுதான் தமிழ் மக்கள் சொல்வார்கள் " என்று இன்னொருவருமாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார்கள்.

சங்கீதசன் கைதைத் தொடர்ந்த சர்ச்சை வெறுமனே எதிர்வினையாற்றும் “குறியீட்டுத்” தேசியவாதத்துக்கும் தமிழ் மக்களின் உரிமைகளை நடைமுறைச் சாத்தியமான முறையில் ஆக்கபூர்வமாக வென்றெடுப்பதற்கும் இடையில் உள்ள ஆழமான இடைவெளியை மீண்டும் ஒரு தடவை பகிரங்கப்படுத்தியிருக்கிறது.

தற்போதைய தமிழ் அரசியல் சக்திகளின் அமைப்பு ரீதியான பலவீனங்களும் குறியீட்டு ரீதியான எதிர்ப்பு அரசியலும் களத்தில் உள்ள சாதாரண தமிழ் மக்களில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது அல்லது அவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை பற்றி முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

புதிய சிந்தனைகள் இல்லாமல் கடந்த காலத்திற்குள் தமிழ் மக்களை வாழ வைப்பதில் இந்த தமிழ் அரசியல்வாதிகள் குறியாக இருக்கிறார்கள். தற்போதைய தமிழ் அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை எதிர்காலத்துக்கான ஒரு நவீன, நடைமுறைச் சாத்தியமான வழி வரைபடத்தை முன்வைக்க முடியாதவையாக இருக்கின்றன. அரை நூற்றாண்டுக்கு பிறகு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பற்றி இந்த கட்சிகளில் சில வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் இதற்கு மிகவும் அண்மைய ஒரு உதாரணம்.

தமிழ் அரசியல் கட்சிகளினால் சமகால நிலைவரத்துக்கு பொருத்தமான முறையில் நவீன கொள்கை சார்ந்த அணுகுமுறைகளுக்கு மாறமுடியவில்லை. இலங்கை அரசை அரசியல் ரீதியாகக் கையாளுவதற்கோ அல்லது பொறுப்புக்கூற வைப்பதற்கோ சர்வதேச சமூகத்தை எதிர்பார்ப்பதை தவிர, முறையான திட்டங்கள் இல்லாதபோது இந்த கட்சிகளின் தலைவர்கள் தமிழ் மக்களை கடந்த காலத்துக்கு இழுத்துச் சென்று உணர்ச்சி வசப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்குகின்றார்கள்.

இந்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தாங்களாக எந்த பங்களிப்பையும் செய்யாத கடந்த காலப் போராட்டங்களை நினைவு கூருவதையும் விடுதலை புலிகளின் குறியீடுகளைப் பயன்படுத்துவதையும் தங்களது வாக்கு வங்கியை பாதுகாப்பதற்கான ஒரு சுலபமான தந்திரோபாயமாக பயன்படுத்துகிறார்கள். அதையும் கூட ஒன்றிணைந்து செய்யக் கூடிய பக்குவம் இல்லாமல் தனித் தனியாக பிரிந்து நின்றே செய்கிறார்கள்.

தமிழ் அரசியல் சக்திகள் தற்போதைய பாதையிலேயே தொடர்ந்து பயணிப்பதாக இருந்தால், பழைய கொடிகளை அசைத்து அவ்வப்போது சலசலப்பை ஏற்படுத்தும் போராட்டங்களை நடத்துவதிலேயே காலத்தைக் கழிக்க வேண்டியிருக்கும்.

தமிழச் சமூகத்தின் பாதுகாப்புக்கும் போர் வடுக்களில் இருந்து மீள்வதற்கும் கடந்த காலப் போராட்டங்களின் அனுபவங்கள் பற்றிய நினைவு அவசியம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அவை ஒருபோதும் சாணக்கியமான அரசியல் அணுகுமுறைகளுக்கு மாற்றாக இருக்க முடியாது. கடந்த காலப் போராட்டங்கள் பயன்தர முடியாமல் போனதற்கான காரணங்களையும் அவற்றுக்குப் பொறுப்பான சக்திகளையும் பற்றி எந்தவிதமான விமர்சனமும் செய்யாமல் எவ்வாறு முன்னோக்கிச் செல்ல முடியும்?

இதைப் புரிந்து கொள்ளாமல் கடந்த கால நினைவுகளை மட்டுமே மூலதனமாகக் கொண்ட அரசியல் வெறுமனே குறியீட்டு தேசியவாத்தின் சுழற்சியாக மாத்திரமே எஞ்சியிருக்கும். தமிழ் மக்களின் அவலங்கள் அப்படியேதான் இருக்கும்.

# ‘இயக்குநர் இமயம்’ பாரதிராஜா...

## தமிழ் சினிமாவின் ‘முதல் மரியாதை’க்கு உரிய படைப்பாளி!



‘என் இனிய தமிழ் மக்களே!’

இந்த கணீர் குரலுடன் தமிழக மக்களை சினிமா ரசனைக்குள் ஈர்த்துக் கட்டிப்போட்டவர் இயக்குநர் பாரதிராஜா. வெகுஜனங்களின் அன்பைப் பெறுபவர் தான் சிறந்த தலைவனாகவும், கலைஞனாகவும் உருவாக முடியும். அந்தவகையில், எளிய மக்களின் வாழ்க்கையில் பொதிந்திருக்கும் உணர்வுகளை தத்துவார்த்தமாகப் படைத்து பாரதிராஜா இயக்குநர் இமயமாக உயர்ந்தார். இப்பூவுலகில் இல்லாமல் போனாலும் இனியும் அவர் இமயம்தான்.

ஸ்டூடியோ செற்களின் சங்கிலியில் இருந்து கேமராவை விடுவித்து லொகேஷன்களுக்கு கூட்டிச் சென்றவர் பாரதிராஜாதான். அதுமட்டுமா செய்தார்... கதாநாயகனுக்கான பிம்பங்களை தேவைக்கேற்ப வளைத்துக் கொள்வார். அதுவும் தனது முதல் படத்திலேயே!

தமிழ் சினிமாவின் தாத்பரியங்களை வகுத்தவர் எனலாம். அதனாலேயே அதை பா.மு - பா.பி என்று பிரிக்கும் அளவுக்கு பாரதிராஜா சினிமா மாணவர்களுக்கு என்றென்றும் ஒரு தனிப்பாடம். சினிமா ரசிகர்களுக்கு என்றைக்கும் ஒரு சொர்க்கம். ‘பாரதிராஜா சினிமாடிக் யுனிவர்ஸ்’ என்று அவர் சுயபிரகடனம் செய்துகொள்ளவில்லையே தவிர, அப்படியான ஒன்று யாராலும் நிகர் செய்ய முடியாத உச்சம்.

தேனி மாவட்ட அல்லிநகரத்தில் மாயத்தேவர் - மீனாட்சி அம்மாள் தம்பதிக்கு 1941 ஜூலை 17 இல் பிறந்த பாரதிராஜாவின் இயற்பெயர் சின்னசாமி.

பள்ளிப் பருவத்திலேயே நாடக நடிப்பு தொற்றிக் கொண்டது. இருந்தாலும், நன்றாகவே படித்தார். ஊர் ஊராக சென்று மக்களிடம் நோய் பற்றி விசாரித்து அறிக்கைகள் தயாரிக்கும் சுகாதார ஆய்வாளர் வேலையும் கிடைத்தது. ஒரு கட்டத்தில் நாடகங்களுக்கு கதையை எழுதி, அரங்கேற்றவும் ஆரம்பித்தார்.

வேலையும், நாடகமுமாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்க பண்ணைபுரத்தில் இளையராஜா, கங்கை அமரன், பாஸ்கர் ஆகியோரோடு நட்பு ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் மேடைகளில் இசை வாசிக்க அண்ணன் பாவலர் வரதராஜனோடு சென்ற ராஜா அண்ட் கோ, பாரதிராஜாவின் நாடகத்துக்கு இசை வாசிக்க மதுரை சென்றார்கள்.

பாரதிராஜா இயக்கிய “ஊர் சிரிக்கிறது”, “சும்மா ஒரு கதை” போன்ற நாடகங்கள் புதுமையாக இருந்தன. இவர்களின் நாடக ஆர்வத்தை பார்த்த கம்யூனிஸ்ட் தலைவர் சங்கரய்யாவின் அண்ணன் மகன் “அன்னக்கிளி” செல்வராஜ், இவர்களுடன் நட்பு கொண்டார்.

சினிமாவுக்குச் சென்றால் பெரிய அளவில் புகழ் பெறலாம் என்று கருத்துகள் பகிர்ந்து கொண்டார்கள். முதலில் “அன்னக்கிளி” செல்வராஜ் சினிமாவில் சேர சென்னைக்கு வந்தார். அதன் பிறகு பாரதிராஜா வந்தார். சினிமாவில் உடனே வாய்ப்பு அமையவில்லை. வாழ்க்கை நடத்துவதே பெரும் போராட்டமாக இருந்தது. இந்த நிலையில் பாஸ்கர், இளையராஜா, கங்கை அமரன் மூவரும் புறப்பட்டு சென்னைக்கு வந்தார்கள். சங்கிலிமுருகன் நடத்திய நாடகங்களுக்கு இசை அமைத்தார்கள். இசை கச்சேரி நடத்தவும் சென்றார்கள். இசை கச்சேரியில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாட வந்தார். எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் அவர்கள் நட்பு வட்டத்தில் சேர்ந்தார்.

திரைப்படங்களுக்கு இசையமைத்து வந்த இசையமைப்பாளர் ஜி.கே.வெங்கடேஷின் அறிமுகம் கிடைக்க அவரிடம் கிற்றார் வாசிக்க சென்றார், இளையராஜா. இளையராஜா கேட்டுக் கொண்டதற்கு இணங்க கவிஞர் கண்ணதாசனிடம் உதவியாளராக கங்கை அமரனை சேர்ந்துவிட்ட ஜி.கே.வெங்கடேஷ், இயக்குநர் புட்டண்ணா கனகலிடம் பாரதிராஜாவை உதவியாளராக சேர்த்துவிட்டார்.

புட்டண்ணா கனகலிடம் “இருளும் ஒளியும்” படத்தில் உதவி இயக்குநராக பணி புரிந்த பாரதிராஜா, அடுத்து கே.ஆர்.ஜி. தயாரிப்பில் கிருஷ்ணன் நாயர் இயக்கிய “தலைப்பிரசவம்” படத்தில் உதவி இயக்குராக பணிபுரிந்தார். அடுத்து கே.ஆர்.ஜி. தயாரிப்பில் ஏ.ஜெகநாதன் இயக்கிய “அதிர்ஷ்டம் அழைக்கிறது” படத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்தார். தனது படங்களில் பாரதிராஜாவின் திறமையை அறிந்த கே.ஆர்.ஜி. அவருக்கு படம் இயக்கும் வாய்ப்பை வழங்கினார். முத்துராமன் கதாநாயகன், ஜெயலலிதா கதாநாயகி, வி.குமார் இசையமைப்பாளர் என்று முடிவாகி, படத்துக்கு “சொந்த வீடு” என்று பெயர் சூட்டப்பட்டது. படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே ஜெயலலிதா படத்தில் இருந்து விலகிக் கொள்வதாக தெரிவித்ததால் அந்தப் படம் டிராப் ஆனது.

அதன்பிறகு கே.ஆர்.ஜி.யின் அலுவலகத்துக்கு பைனான்சியராக வந்த எஸ்.ஏ.ராஜ்கண்ணுவிடம் பேசிக் கொண்டிருந்தபோது “மயிலு” என்கிற கதையை பாரதிராஜா சொல்லி இருக்கிறார். அந்தக் கதை எஸ்.ஏ.ராஜ்கண்ணுவுக்கு பிடித்துவிட்டது. அதற்கு “16 வயதினிலே” என்று பெயர் வைத்து கமல், ரஜினி, சத்யஜித், ஸ்ரீதேவி, காந்திமதி நடிப்பில், நிவாஸ் ஒளிப்பதிவில் படமாக்க முடிவு செய்தார்.

இவர்களின் நட்பு வட்டத்தில் இருந்த “அன்னக்கிளி” செல்வராஜ், கதாசிரியர் பஞ்சு அருணாச்சலத்திடம் உதவியாளராக இருந்து, அவர் தயாரித்த “அன்னக்கிளி” படத்திற்கு இளையராஜாவை அறிமுகம் செய்து இசையமைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

தேவராஜ் - மோகன் இயக்கத்தில் “அன்னக்கிளி” படம் வெளியாகி பெரும் வெற்றிப் படமாக அமைந்து இளையராஜா புகழ் பெற்றார். உடனே தனது நண்பர் இளையராஜாவை “16 வயதினிலே” படத்துக்கு இசையமைப்பாளராக ஒப்பந்தம் செய்து படப்பிடிப்பை தொடங்கினார், பாரதிராஜா.

1977 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வெளியான “16 வயதினிலே” படம் பெரும் வெற்றிப் படமாக அமைந்து, வசூலில் சாதனை படைத்தது. முதல் படத்திலேயே சிறந்த இயக்குநருக்கான தமிழக அரசின் விருது பெற்றார்.

மீண்டும் எஸ்.ஏ.ராஜ்கண்ணுவின் தயாரிப்பில் சுதாகர், ராதிகாவை அறிமுகப்படுத்தி “கிழக்கே போகும் ரயில்” படத்தை இயக்கிய பாரதிராஜா, அடுத்து தனது வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட கே.ஆர்.ஜி. தயாரிப்பில் கமல், ஸ்ரீதேவி நடிப்பில் “சிவப்பு ரோஜாக்கள்” படத்தை இயக்கினார். தனது உதவியாளர் கே.பாக்கியராஜ் நடிப்பில், தனது தயாரிப்பில் “புதிய வார்ப்புகள்” படத்தை இயக்கிய பாரதிராஜா, இன்னொரு உதவியாளரான கே.விஜயன், சுதாகர், ராதிகா நடிப்பில் “நிறம் மாறாத பூக்கள்” படத்தை இயக்கினார். இதில் கே.விஜயனுக்கு அவரே டப்பிங் பேசி இருந்தார்.

அடுத்து “கல்லுக்குள் ஈரம்” படத்தில் அவரே கதாநாயகனாக அறிமுகமானார். அவரது படங்களின் ஒளிப்பதிவார் நிவாஸ் படத்தை இயக்கினார். இந்தப் படத்தில் அருணா, விஜயசாந்தி இருவரையும் கதாநாயகிகளாக அறிமுகம் செய்தார்.

‘சிவப்பு ரோஜாக்கள்’ படத்தை தெலுங்கு மொழியில் “கொத்த ஜீவித்தலு” என்கிற பெயரிலும், இந்தி மொழியில் “ரெட் ரோஸ்“ என்கிற பெயரிலும் இயக்கிய பாரதிராஜா, அடுத்து தனது உதவியாளர் மணிவண்ணன் கதையில் “நிழல்” என்கிற படத்தை இயக்கினார். அந்தப் படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

மீண்டும் தனது உதவியாளர் மணிவண்ணன் சொன்ன கதையில் “அலைகள் ஓய்வதில்லை” என்கிற படத்தை தனது நண்பனும், இளையராஜாவின் சகோதரருமான பாஸ்கர் தயாரிப்பில் இயக்கினார். அந்தப் படத்தில் கார்த்திக் நாயகனாகவும், ராதா கதாநாயகியாகவும், தியாகராஜன் வில்லனாகவும் அறிமுகமானார்கள். இந்தப் படத்திற்காக தமிழக அரசின் சிறந்த இயக்குநருக்கான விருது பெற்றார்.

மேலும், ‘டிக்டிக்டிக்’, ‘காதல் ஓவியம்’, ‘வாலிபமே வாவா’, ‘மண்வாசனை’, ‘புதுமைப் பெண்’, ‘ஒரு கைதியின் டைரி’, ‘முதல் மரியாதை’, ‘கடலோர கவிதைகள்’, ‘வேதம் புதிது’, ‘கொடி பறக்குது’, ‘என்னுயிர் தோழன்’, ‘புது நெல்லு புது நாத்து’, ‘நாடோடி தென்றல்’, ‘கேப்டன் மகள்’, ‘கிழக்கு சீமையிலே’, ‘கருத்தம்மா’, ‘பசும்பொன்’, ‘தமிழ்செல்வன்’, ‘அந்தி மந்தாரை’, ‘தாஜ்மகால்’, ‘கடல் பூக்கள்’, ‘ஈரநிலம்’, ‘கண்களால் கைது செய்’, ‘பொம்மலாட்டம்’, ‘அன்னக்கொடி’, ‘மீண்டும் ஒரு மரியாதை’ ஆகிய தமிழ் படங்கள், சீதாகொகா சிலுகா, யுவதாரம் புலிச்சிண்டி, ஈதரம் இல்லலு, ஜமடகனி, ஆராதனா ஆகிய தெலுங்கு படங்களையும், சொல்வ சவான், லவ்வர்ஸ், சாவேரே வலி காடி ஆகிய இந்திப் படங்கள் எனெ 40 ப்ளஸ் படங்களை இயக்கியிருக்கிறார்.

16 வயதினிலே, சிகப்பு ரோஜாக்கள், கல்லுக்குள் ஈரம், டிக்டிக்டிக், என்னுயிர் தோழன், கடல் பூக்கள், பொம்மலாட்டம் உள்பட 12 படங்களுக்கு கதை எழுதியவர், கே.பாக்யராஜ், மணிவண்ணன், கலைமணி, “அன்னக்கிளி” செல்வராஜ், பஞ்சு அருணாசலம், வேதம் புதிது கண்ணன் ஆகியோரின் கதைகளிலும் படம் இயக்கி இருக்கிறார்.

‘கல்லுக்குள் ஈரம்’ படத்தில் நடிகராக அறிமுகமான பாரதிராஜா, அதன் பிறகு நிழல்கள், தாவணி கனவுகள், உட்பட இருபது படங்களில் நடித்திருக்கிறார். இவரது ‘முதல் மரியாதை’ படம் 1986 இல் தாஷ்கண்ட் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. தன் தாய் கருத்தம்மாவின் பெயரில் வெளிவந்த ‘கருத்தம்மா’ படத்துக்காக தேசிய விருதை தன் தாயையே பெற்றுக்கொள்ள வைத்தார்.

தமிழக அரசின் விருதுகள், பிலிம் பேர் விருதுகள், தேசிய விருதுகள் தொடங்கி பத்மஸ்ரீ வரைக்கும் பாரதிராஜாவை தேடி வந்து கௌரவித்தன.

ஒரு கடைக்கோடி ரசிகனின் சிறு புன்னகையோ, ஒரு துளி கண்ணீரோ அல்லது அவன் சிந்தனையை சொடுக்குவதோ தான் படைப்பாளியின் வெற்றி. பாரதிராஜாவின் வெற்றி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**(நன்றி - தி ஹிந்து தமிழ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச் சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்லசெய்தி வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சங்களை உணர்வார்கள்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஒரு புதிய சாதனையைப் படைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**மகரம்**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வரக்கூடும். சகிப்புதன்மை தேவைப்படும்.

# சுகாதார தொண்டர்கள் போராட்டம் நேற்று 6ஆவது நாளாக தொடர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன். 11

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள், தமக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று 6ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களுக்கு நடத்தப்படவுள்ள நேர்முகத் தேர்வுக்காக 92 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த ஐந்து ஆண்டுகளாக தொண்டர்களாக பணியாற்றி வரும் தமக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னரே ஏனையோருக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் இபோராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்புதிகாரிக்கு திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன். 11

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடந்த 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி கடமையேற்ற ஏ.நளின் தர்சனவுக்கு களுத்துறை மாவட்டத்துக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையம் இதுவரை காலமும் தனியார் வீடுகளில் இயங்கி வந்த நிலையில், தற்போது புதிதாக பொலிஸ் நிலையம் கட்டப்பட்டு புதிய பொலிஸ் நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இந்த புதிய பொலிஸ் நிலைய கட்டடப் பணிகளை துரித கதியில் முன்னெடுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான நளின் தர்சன தீவிரமாகச் செயற்பட்டு வந்த நிலையில் குறித்த திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த பிறடோஸ் நான்கு மாத காலப் பகுதிக்கு கூட முடியவடையாத நிலையில், மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று கோப்பாய் பொலிஸ் நிலையப் புதிய பொறுப்பதிகாரியாக கடமையேற்கவுள்ளார். (அ)

# வவுனியா விபத்தில் இளைஞர் படுகாயம்!

வவுனியா, ஜூன். 11

வவுனியா - மன்னார் வீதி நெளுக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற மோட்டர் சைக்கிள், வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது வவுனியாவில் இருந்து நெளுக்குளம் நோக்கிச் சென்ற கார் ஒன்றும் பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட நிலையில் இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை!

யாழ்ப்பாணம், ஜூன். 11

முதலாவது பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இசைத்துறையின் தலைவர் கலாநிதி சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது இசைத்துறை பீடமானது 60 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தை கொண்டது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் இலங்கையில் மட்டுமல்லாமல் உலகம் பூராவும் பரந்து காணப்படுகிறனர்.

அந்தவகையில் இசைத்துறையின் வரலாற்றில் ஒரு மைக்கல்லான முதலாவது பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு நடத்தப்படவுள்ளது.

நாளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் காலை 9.00 மணியளவில் ஆய்வு மாநாட்டின் நிகழ்வுகள் ஆரம்பமாகும். நாளை மறுதினம் மாலை 4.00 மணிக்கு எமது பீடம் சார்ந்து கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த ஆய்வு மாநாடானது நடைபெறவுள்ளது-என்றார். (அ-05)

# வலி தென்மேற்குப் பிரதேச சபையின் காணிக்குள் சட்டவிரோத செயல்களா?

**ஆளுநர் செயலகத்தில் முறைப்பாடு!**

யாழ்ப்பாணம், ஜூன். 11

வலி தென்மேற்கு பிரதேச சபையின் காணிக்குள் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஆள் நடமாட்டம் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள வலி தென்மேற்கு பிரதேச சபையின் காணி ஒன்று நீண்டகாலமாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்த காணியை விட்டு இராணுவம் வெளியேறிய நிலையில் அதனை பிரதேச சபை பொறுப்பேற்றது.

நேற்று முன் தினம் அந்தக் காணிக்குள் சந்தேகத்துக்கு இடமான முறையிலான ஆள் நடமாட்டம் காணப்பட்டது.

குறித்த காணியில் பிரதேச சபையினால் 24 மணிநேரமும் பாதுகாப்பு ஊழியர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இந்நிலையில் நேற்று முன் தினம் பாதுகாப்பு ஊழியர் தவிர்ந்த ஆண், பெண் என மேலும் இருவர் அந்தக் காணியினுள் சந்தேகத்துக்கு இடமான முறையில் இருந்துள்ளனர்.

இது குறித்து பிரதேச சபையிடம் அழைப்பு மேற்கொண்டு வினவியபோது அங்கு ஒரேயொரு பாதுகாப்பு ஊழியர் மட்டும் தான் கடமையில் இருப்பதாகவும், வேறு யாரும் இல்லை எனவும் கூறப்பட்டது. பின்னர் மீண்டும் சிறிது நேரத்தின் பின்னர் பிரதேச சபைக்கு அழைப்பு மேற்கொண்டவேளை செயலாளர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

அதன் பின்னர் இந்த விடயம் குறித்து ஆளுநரின் செயலாளருக்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இது குறித்து விசாரணை மேற்கொள்வதாக ஆளுநரின் செயலாளர் உறுதியளித்தார்.

குறித்த காணியில் இருந்த இரும்பு படலை கடந்த திங்கள் கிழமை களவாடப்பட்ட நிலையில் அது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே நேற்று அந்த காணியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஆள் நடமாட்டமும் காணப்பட்டது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை யாருமே தடுத்து நிறுத்தமுடியாது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டம்




கொழும்பு, ஜூன். 11

“உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் உள்ளிட்ட முக்கிய வழக்குகள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் மிக விசேட விசாரணைகளை எக்காரணம் கொண்டும் தடுத்து நிறுத்த முடியாது. அரசியல் இலாபங்களுக்காகப் போராட்டக்காரர்கள் ஒன்று அல்ல, பத்து கூடாரங்கள் அமைத்துப் போராடினாலும் விசாரணைகள் அதன் போக்கில் நேர்மையாக முன்னோக்கி நகரும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சி.ஐ.டி. விசாரணைகளுக்குத் திட்டமிட்டு முட்டுக்கட்டை போடுபவர்களுக்கு எச்சரிக்கை விடுத்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்-

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தற்போதைய சுயாதீன விசாரணைகளுக்கு எவரேனும் இடையூறு விளைவிக்கும் வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நடந்துகொண்டாலோ, அல்லது அது குறித்து உண்மைக்குப் புறம்பான போலித் தரவுகளைப் பொதுவெளியில் வெளியிட்டாலோ, அது குறித்துத் தகுந்த சான்றுகளுடன் நீதிமன்றத்துக்கு உடனுக்குடன் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர், சட்டத்தை மீறிய அத்தகைய நபர்களுக்கு எதிராக நீதிமன்றமே தகுந்த உத்தியோக பூர்வ தீர்மானங்களை எடுக்கும்.

நாட்டில் ஏதேனும் முக்கிய ஊழல் அல்லது குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் தீவிரமடையும் போது, திட்டமிட்ட சில போராட்டங்கள் மூலம் பொதுமக்களின் அவதானத்தை வேறு வழிகளில் திசை திருப்பும் ஒரு தவறான கலாசாரம் கடந்த காலங்களில் வளர்ந்து வந்துள்ளது. இத்தகைய திசைதிருப்பல் வேலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமாயின், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகள் அனைத்தும் மிக விரைவாக இறுதி இலக்கை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.-என்றார். (அ)

# நாடு முழுவதும் 8,000க்கும் அதிகமான நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறிவு!

கொழும்பு, ஜூன். 11

நாட்டின் 74 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது, 8,000 இற்கும் அதிகமான டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த விசேட களப் பரிசோதனை நடவடிக்கைகளின் போதே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, இந்த சோதனை நடவடிக்கையின் போது மொத்தமாக 31,196 வளாகங்கள் மற்றும் இடங்கள் விரிவான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு பரிசோதிக்கப்பட்ட இடங்களில், 8,121 இடங்கள் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய அதிகளவிலான அபாயத்தைக் கொண்ட இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர ரிட் மனு தாக்கல்!

## தனது கைதாவதை தடுக்கக் கோரி

கொழும்பு, ஜூன். 11

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாக, எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட குழுவினர் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

# யோஷிதவுக்கு எதிரான வழக்கு ஜூலை மாதம்!

கொழும்பு, ஜூன். 11

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி போரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றுமொரு வழக்கை ஜூலை மாதம் 16 ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, பிரதிவாதிகளான யோஷித ராஜபக்ஷ மற்றும் டெய்சி போரஸ்ட் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விகாரையில் ஒலிப்பதிவுக்கூடம் உடைத்துத் திருடிய நபர் கைது!

கொழும்பு, ஜூன். 11

பாதுக்கை, மாதுலாவ சுதர்மாராம விகாரையின் பௌத்த பாடல்களை பதிவு செய்யும் ஒலிப்பதிவுக்கூடம் ஒன்றை உடைத்து, அங்கிருந்த சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான கணினிகள் உள்ளிட்ட பல ஒலிப் பதிவு உபகரணங்களைத் திருடிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாதுக்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்

அந்த விகாரையின் தேரர் ஒருவரால் பாதுக்கை பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பாதுக்கை, வட்டரெக ஜயமுதுகம பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

பொருள்களைத் திருடிய பின்னர், அவற்றை ஒருவருக்கு விற்பனை செய்திருந்த நிலையிலேயே பொலிஸாரால் அவை மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் “ஐஸ்” போதைப்பொருளுக்குக் கடுமையாக அடிமையானவர் என்பதுடன், அவர் கைது செய்யப்படும் போது அவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளார். (அ)

# வாகனச் சாரதிகளுக்கான புள்ளி குறைப்பு விரைவில்

கொழும்பு, ஜூன். 11

இலங்கையில் வீதிப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், வாகன சாரதிகளுக்கான “புள்ளி குறைப்பு முறைமை” எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீதிகளில் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுபவர்களைக் கட்டுப்படுத்தவும், சாரதி ஒழுக்கத்தை மேம்படுத்தவும் கடுமையான சட்ட அமுலாக்கம் அவசியம்.

இலங்கையில் கடந்த வருடத்தில் மாத்திரம் வீதி விபத்துக்கள் காரணமாக 2,750 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் மோட்டார் சைக்கிள் சாரதிகளும், பாதசாரிகளுமே அதிகளவில் உயிரிழந்துள்ளனர்.

இந்த புதிய திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சாரதி அனுமதிப்பத்திரத்திற்கும் 24 புள்ளிகள் வழங்கப்படும். போக்குவரத்து விதிகளை மீறும் போது இந்த புள்ளிகள் குறைக்கப்படும். தொடர்ச்சியாக தவறுகளை இழைத்து புள்ளிகளை இழக்கும் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்படும்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் நிலவிய நிர்வாக சிக்கல்கள் மற்றும் முறைகேடுகள் காரணமாகவே இந்த திட்டம் இதற்கு முன்னர் தாமதமடைந்தது.

தற்போது அங்கு ஊழலை ஒழிக்கவும், வினைத்திறனை அதிகரிக்கவும் “இ-மோட்டரிங்” திட்டத்தின் கீழ் டிஜிற்றல் மயமாக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சாய்ந்தமருது நகர சபையை ஸ்தாபிக்க துரித நடவடிக்கை

## உள்ளூராட்சி அமைச்சர் பணிப்பு

அம்பாறை, ஜூன். 11

சாய்ந்தமருது நகர சபையை ஸ்தாபித்து, செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எல்லை நிர்ணயப் பணிகளை பூர்த்தி செய்து, தேர்தலை விரைவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளையும் துரிதமாக முன்னெடுக்குமாறு உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரட்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

சாய்ந்தமருது நகர சபை தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் ஏற்பாட்டில் அவரது பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, முன்னாள் பிரதேச செயலாளரும் ஓய்வுநிலை சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியுமான ஏ.எல்.எம். சலீம், சாய்ந்தமருது- மாளிகைக்காடு பெரிய பள்ளிவாசல் செயலாளர் அப்துல் அஸீஸ், சாய்ந்தமருது மறுமலர்ச்சி மன்றத்தின் செயலாளர் கலீல் எஸ். முஹம்மட், டொக்டர் ஷிஹாப் ஆகில் மற்றும் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் முஹம்மட் பர்ஹான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேசத்திற்கென தனியான நகர சபையை ஸ்தாபிப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி, சட்ட வலுவுடையது எனவும் 02 மாத காலத்தில் எல்லை நிர்ணயப் பணிகளை பூர்த்தி செய்து, சாய்ந்தமருது நகர சபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டு கடந்த மே மாதம் 07 ஆம் திகதி உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இதையடுத்து சாய்ந்தமருது நகர சபையை ஸ்தாபித்து, செயற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஓர் அங்கமாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரட்னவுடன் இந்த முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது சாய்ந்தமருது நகர சபை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் செயற்றிட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அதன் பிரகாரம் அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக முன்னெடுப்பதற்கான பணிப்புரைகளை அங்கிருந்தவாறே சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் விடுத்துள்ளார்.

சாய்ந்தமருது நகர சபைக்கான அலுவலகத்தை தற்காலிக இடம் ஒன்றில் அவசரமாகத் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளல், அதன் ஊடாக நிர்வாக விடயங்கள் மற்றும் சேவைகளை முன்னெடுப்பதற்கான பௌதீக மற்றும் இயந்திர வசதிகளையும் ஆளணியினரையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநரை அறிவுறுத்தும் கடிதத்தை உடனடியாக அனுப்புவதற்கும் அங்கு அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

# சுகாதார உத்தியோகத்தர்களுக்கு அடிப்படை உயிர்காப்புப் பயிற்சி



அம்பாறை, ஜூன். 11

கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் மருத்துவ சேவைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களுக்கான 'அடிப்படை உயிர்காப்பு' மற்றும் 'முதலுதவி' பயிற்சி நிகழ்ச்சி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை, பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத் ஒருங்கிணைத்திருந்தார்.

கல்முனை பிராந்தியத்திலுள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் புதிதாக நிறுவப்பட்டுள்ள முதலுதவிக் குழுக்களின் திறனையும் செயற்பாட்டு ஆற்றலையும் வலுப்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார தாதிய சகோதரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# சர்வதேச பிக்குகளின் ஆன்மீக பயணம் திருகோணமலையில் இருந்து ஆரம்பம்!



திருமலை, ஜூன். 11

தாய்லாந்தில் இருந்து வருகை தந்த பௌத்த பிக்குகளின் பாதை யாத்திரைப் பயணம் திருகோணமலை நகரில் இருந்து நேற்று ஆரம்பமானது.

திருகோணமலை கண்டி பிரதான வீதி ஊடாக வருகை தந்த பிக்குகள் கொண்ட குழுவினரை திருகோணமலை மாவட்ட செயலகம் சார்பில் மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யு.ஜீ. எம்.ஹேமந்த குமார தலைமையிலான குழுவினர் வரவேற்று ஆசி பெற்றுக் கொண்டனர்.

குறித்த பாதை யாத்திரை திருகோணமலை, கந்தளாய், ஹபரணை, அநுராதபுரம், குருநாகல், மாத்தளை உட்பட கண்டி வரை பயணிக்கவுள்ளது.

10 நாள்கள் நடை பயணம் கொண்ட பாதை யாத்திரையானது 20 நாள்கள் தங்கியிருக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ராப் பாடகர் சங்கீத்சன் கைது; கனடா மேயர் கடும் கண்டனம்



ஒட்டாவா, ஜூன். 11

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், 24 வயதுடைய தமிழ் ஹிப் ஹொப் கலைஞர் சங்கீத்சன் கணேஸ்குமார் கைது செய்யப்பட்டமைக்கு கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை மகிமைப்படுத்தியதாகக் கூறி கடந்த ஜூன் 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், ஜூன் 17 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒரு கலைஞர் தனது அடையாளத்தை வெளிப்படுத்துவதற்காகக் கைது செய்யப்படுவது கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் என மேயர் பற்றிக் பிரவுண் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது ஜனநாயகப் பண்புகளை சீர்குலைக்கிறது. இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக பலமுறை உறுதியளித்த போதிலும், மாற்றுக்கருத்துக்களை ஒடுக்குவதற்காக இந்தச் சட்டத்தை அவர்கள் தொடர்ந்து ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலையின் உச்சக் கட்டத்திற்குப் பின்னரும், தமிழர்கள் இன்னும் தீவிர இராணுவக் கண்காணிப்பு மற்றும் முறையான ஒடுக்குமுறையின் கீழேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த கைது நடவடிக்கையானது, பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள "தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம்" போன்ற நினைவுத் திட்டங்களின் முக்கியத்துவத்தை மீண்டும் உணர்த்துகிறது.

பாதிக்கப்பட்ட கலைஞரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள மேயர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக ஒழிக்குமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து தானும் வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நற்பிட்டிமுனை அம்பலத்தடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் சனியன்று ஆரம்பம்

அம்பாறை, ஜூன். 11

கல்முனை மாநகர் நற்பிட்டிமுனையில் அமைந்துள்ள அருள்மிகு அம்பலத்தடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 2026 ஆம் ஆண்டிற்கான நிகழ்வுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக ஆரம்பமாகவுள்ளன.

அதேவேளை, 19 ஆம் திகதி பத்தி முக்தி திருவிழாவும், 20ஆம் திகதி திருவேட்டைத் திருவிழாவும், 21 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் நடைபெ றும்.

அதனைத் தொடர்ந்து, சங்காபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு நடைபெற ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை உட்பட 10 நாடுகளிலிருந்து மாத்திரம் வீட்டு பணியாளர்களை பெற்றுக் கொள்ள குவைத் அனுமதி

கொழும்பு, ஜூன். 11

குவைத்தின் வீட்டுப் பணியாளர் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும், அதன் மீதான கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கும் ஏதுவாக, வீட்டுப் பணியாளர் ஆட்சேர்ப்பு தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்றை அந்நாட்டின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கை உள்ளிட்ட 10 அங்கீகரிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மாத்திரம் வீட்டுப் பணியாளர்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 27 நாடுகளிலிருந்து பணியாளர்களைத் திரட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் மனிதவள பொது அதிகாரசபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், நேபாளம், வியட்நாம், எத்தியோப்பியா, எரித்திரியா, பெனின், தென்னாப்பிரிக்கா, செனகல் ஆகிய நாடுகளிலிருந்து வீட்டுப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியும். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேவாலயங்களை...

தெரியவந்துள்ளது.

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தற்கொலை குண்டுத்தாரிகளுடன் சுரேஷ் சாலே நேரடியாக தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, குண்டுத்தாக்குதலுக்கு உதவி ஒத்தாசை வழங்கியுள்ளதாகவும், இந்த விடயங்கள் அனைத்தும் தீவிரமான விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு பகுதிக்கு அனுப்பப்பட்ட நான்கு பேரில் ஒருவர், இஸ்லாம் அடிப்படைவாதி என்றும், அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார். எனினும், அவர் தற்போது வரை காணமால் போயுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், தாக்குதல் நடத்தப்படும் வரை இஸ்லாம் அடிப்படைவாதிகளை பயன்படுத்தி, பல்வேறு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டமை விசாரணைகளில் உறுதிபடுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள அதிர்ச்சியூட்டும் உண்மைகளும், முக்கிய விபரங்களும் வெளியில் கசிந்துவிடக்கூடாது என்பதற்காக, மிக முக்கியமான மற்றும் இரகசியமான தகவல்கள் வெளிவருவதைத் தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை சுரேஷ் சாலே முன்னெடுத்திருந்தார் என்றும் அமைச்சர் குற்றம் சாட்டினார். (அ)

## முன்னாள் கடற்படை...

11 இளைஞர்களின் கடத்தல் மற்றும் காணாமற்போன சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர்களுக்கு பாதுகாப்பளித்தமை மற்றும் நீதியைத் தடுக்கும் வகையில் செயல்பட்ட விவகாரம் தொடர்பாக, அவர் மீண்டும் இந்த வழக்கில் சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக்காக எதிர்வரும் ஜூன் மாதம் 27ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## விசாரணைக்கு...

தாக்குதல் குறித்து சாட்சியாளர் ஆசாத் மௌலானா வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையில், கடந்த ஜூன் 3 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டது.

அத்துடன், சந்தேக நபரான சுரேஷ் சாலேயை மேலும் 90 நாள்களுக்கு தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவும் நீடிக்கப்பட்டது. இந்தச் சட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னரே, சுரேஷ் சாலே அதுவரை விசாரணைக்கு ஒத்துழைத்த முறையை முழுமையாக மாற்றி, அதற்குப் முட்டுக்கட்டை போடும் வகை யில் ஜூன் 5 ஆம் திகதி இரவு முதல் திட்டமிட்டபடி உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தார்.தனது உறவினர்கள் கொண்டு வந்த உணவுகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

உணவு தவிர்ப்பு காரணமாக அவரது இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்ததைத் தொடர்ந்து, பொலிஸ் மருத்துவமனை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் அவர் ஜூன் 7 ஆம் திகதி பலத்த பாதுகாப்புடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தற்போது அவர் 42 ஆவது விடுதியில் மனநல மருத்துவர்கள் , உடலியல் நிபுணர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களின் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கைது செய்யப்பட்டபோது சுரேஷ் சாலேயிடமிருந்து கைப்பற்றப்பட்ட நவீன ரக அப்பிள் கைத்தொலைபேசி மற்றும் அவரது வீட்டில் சோதனையிடப்பட்டு கைப்பற்றப்பட்ட மடிக்கணினி ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கோ, அவற்றின் கடவுச்சொற்களை வழங்குவதற்கோ அவர் இதுவரை மறுப்பு தெரிவித்து, உண்மைகளை மறைக்க முற்பட்டுள்ளார்.

எனினும், ஏனைய அறிவியல் மற்றும் தொலைபேசி சான்றுகளின் மூலம் இந்தச் சதித்திட்டத்துடனும், அதன் முன்தயாரிப்புகளுடனும் அவருக்கு உள்ள தொடர்பு மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு உணவு தவிர்ப்பு போராட்டத் திற்கோ அல்லது அழுத்தங்களுக்கோ அஞ்சி இந்த விசாரணை கள் நிறுத்தப்பட மாட்டாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 278 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்து, 500 இற்கும் மேற்பட் டோர் காயமடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும். இந்தச் சதித்திட்டத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் தப்பியோட முடியாதபடி நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டனை பெற்றுக்கொடுக்கப்படுவது உறுதி செய்யப்படும்" என அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு சிறைச்சாலைக்குள் அதிசொகுசு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது எனவும், அவர்கள் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு அஞ்சி அரசாங்கம் விசாரணைகளைக் கைவிடாது எனவும் அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருக்கையில், நாட்டின் சில வங்குரோத்து அரசி யல் கட்சிகள், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்பில் இருந்து, இந்த விவகாரத்தை அரசியலாக்கி பொதுமக்களை திசைதிருப்ப முயல்கின்றன."

கடந்த காலங்களில் இடம்பெற்ற சில சர்ச்சைக்கரிய மற்றும் மர்மமான மரணங்கள் குறித்து சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதைய உணவுத்தவிர்ப்பு போராட்டங்களின் பின்னணியில் உள்ள அச்சம் என்ன என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

"இவ்வாறான எந்தவொரு பதற்ற நிலைகளுக்கோ அல்லது அச்சுறுத்தல்களுக்கோ இந்த அரசாங்கம் ஒருபோதும் பணியாது. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் குறித்த விசாரணைகள் மட்டுமன்றி, இந்த நாட்டின் பொதுமக்களின் சொத்துக்கள் மற்றும் பொதுப்பணத்தைக் கொள்ளையடித் தமை, கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் கடத்தப்பட்டமை உள்ளிட்ட அனை த்துக் குற்றச்சாட்டுகள் குறித்தும் முறையான மற்றும் நடுநிலை யான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன."

இந்த அனைத்து விசாரணைகளும் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி, மிக உன்னிப்பாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுக்கப்படும் என உறுதியளித்த அமைச்சர், குற்றவாளிகள் அனைவரும் தப்பியோட முடியாதபடி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## பிரபாகரனின் மகன்...

தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் நேற்று வெளியான செய்தியை சபைக்கு காட்டி மேலும் உரையாற்றுகையில், "பிரபாகரனின் மகன் படுகொலை சனல் 4 ஆவணப்படம் பொய் கூறுகிறது. பிரிட்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் நிராகரிக்கின்றது" என்று இந்தப் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

அதாவது சனல் 4 ஊடகம் வெளியிடும் ஆவணப்படத்தில் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டமை தொடர்பான விடயங்கள் உள்ளன. பாலச்சந்திரன் தொடர்பான படங்கள் பல வெளிவந்துள்ளன. முதலில் பதுங்கு குழியில் உணவுடன் அமர்ந்திருப்பதை போன்ற படம் உள்ளதுடன், அடுத்த படத்தில் அவரின் உடல் துப்பாக்கிச் சன்னங்களின் ஓட்டைகளுடன் கிடக்கும் படம் உள்ளது.

எவ்வாறாயினும் பயங்கரவாதியின் மகனாக இருந்தாலும் இவ்வாறு நடக்கக்கூடாது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டபோது அவரது மகன் கொல்லப்படவில்லை. அவரின் குடும்பத்திற்கு அரசாங்கம் பாதுகாப்பை வழங்கியது. ஆனால் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தமது முன்னாள் தலைவரை மறந்துவிட்டது.

அத்துடன் சஹ்ரான் உயிரிழந்தபோதும் அவரது மகள் பாதுகாப்பாக இருக்கின்றார். அவ்வாறானால் ஏன் பிரபாகரனின் மகன் மட்டும் கொல்லப்பட்டார்? அவருக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடந்தது?இது தொடர்பில் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை? உண்மையில் போர்க் காலத்தில் பிரபாகரின் மகன் கொலை செய்யப்பட்டிருந்தால் அது யுத்தக்குற்றமாக கருதப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

## பயங்கரவாத தடை...

சட்டங்களுடனும் தரநிலைகளுடனும் பொருந்தாத அளவுக்கு பரந்த மற்றும் தெளிவற்ற விதிகளை கொண்ட இந்தச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவது கவலைக்குரியதாகும்.

சமீபத்திய சம்பவங்கள், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தப்படும் விதம் குறித்த நீடித்துவரும் அச்சங்களை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் ஒன்று, 24 வயதுடைய தமிழ் 'ஹிப்ஹாப்' பாடல் கலைஞரான சங்கீத்ஷன் கணேஷ்குமாரின் வழக்காகும். அவர் ஜூன் 02ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டு, அவர் நிகழ்த்திய ஒரு கலைநிகழ்ச்சி மற்றும் அது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டமை தொடர்பாக ஜூன் 17 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது நிகழ்ச்சி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பெருமைப்படுத்துவதற்காக அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனினும், பயங்கரவாத தடைச் சட்டத்திலுள்ள பரந்த மற்றும் தெளிவற்ற குற்ற வரையறைகள், சர்வதேச சட்டத் தரநிலைகளுடன் ஒத்துப்போவதில்லை.

ஆகவே, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட குற்றச்சாட்டின் கீழ், சர்வதேச நியாயமான விசாரணைத் தரநிலைகளுக்கேற்ப உடனடியாக வழக்குத் தாக்கல் செய்யப்படாவிட்டால், சங்கீதன் கணேஷ்குமார் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்துகிறது.

அதே வாரத்தில், அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே தொடர்பிலும் குடும்பத்தினரும் சட்டத்தரணிகளும் உரிய சட்ட நடைமுறைகள் பின்பற்றவில்லை. காவலில் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் பொதுவாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர், 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார். அந்தத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர்.

இலங்கை அதிகாரிகள், அந்த கொடூரமான தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டை வழங்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளனர். குற்றச்சாட்டுக்குரியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

ஆனால் அது உரிய சட்ட நடைமுறைகளையும் நியாயமான விசாரணை உரிமைகளையும் முழுமையாகப் பின்பற்றியதாக இருக்க வேண்டும்.

மேலும், போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகள் உள்ள சில வழக்குகளிலும் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது, அந்தச் சட்டத்தின் பயன்பாட்டு வரம்பும் நடைமுறையும் குறித்து மேலும் கேள்விகளை எழுப்புகிறது. தற்போதைய வடிவத்தில், பயங்கரவாத தடைச் சட்டம் தன்னிச்சையான மற்றும் தவறான நடைமுறைகளுக்கு வழிவகு க்கும் நிலையில் உள்ளது. குறிப்பாக, போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால், சித்திரவதை மற்றும் பிற கொடூரமான அல்லது மனிதாபிமானமற்ற நடத்தைகள் நடை பெறக்கூடிய சூழலை இது உருவாக்குகிறது.

அதற்கமைய, பயங்கரவாத தடைச் சட்டத்தின் தவறான பயன்பாடு மற்றும் துஷ்பிரயோகம் குறித்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் உடனடியாக விசாரிக்கவேண்டும்.

சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும் மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவருக் கும், குறிப்பாக 'சுரேஷ் சலே' உட்பட, முழுமையான சட்ட நடைமுறைப் பாதுகாப்புகளை உறுதி செய்ய வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு உடனடியாக இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்பதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை மேலும் தாமதமின்றி இரத்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. (அ)

## மாகாண தேர்தலை...

மேலும், ஜே.ஆர்.ஜயவர்தன, ரணில் விக்ரமசிங்க போன்ற தலைவர்கள் நாட்டுக்குச் செய்த பொருளாதார பங்களிப்புகளையும், மின்சார உற்பத்தித் திட்டங்களையும் பட்டியலிட்ட அவர், அரசாங்கம் தேர்தலை விரைவாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் ஹரிணி அமரசூரிய, கடந்த ஒன்றரை வருட காலத்திற்குள் தற்போதைய அரசாங்கம் இரண்டு முக்கிய தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளதை நினைவூட்டினார். "தேர்தல்களை எதிர்கொள்வதில் எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. ஆனால், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சில சட்டப் பிரச்னைகள் காணப்படுகின்றன.

இது குறித்து ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. நாங்கள் எப்போதும் சட்டபூர்வமாகவும், ஜனநாயக ரீதியாகவும் மட்டுமே செயல்படுவோம்.

ஜனநாயகம் என்ற பெயரை எமக்குத் தேவையானவாறு மாற்றி, லாபம் ஈட்ட நாம் முனையவில்லை" எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

"செய்ததாகக் கூறும் திட்டங்கள் அனைத்தும் அவ்வளவு வெற்றிகரமாக அமைந்திருந்தால், கடந்த இரண்டு தேர்தல்களில் மக்கள் ஏன் அவர்களது "சிஸ்டத்தை" தோற்கடித்தார்கள்? அவர்கள் செய்தவற்றின் தோல்வியை மக்கள் உணர்ந்ததாலேயே எங்களது புதிய சிஸ்டத்தை மக்கள் வெற்றி பெறச் செய்துள்ளார்கள். மக்கள் தீர்ப்பின் மூலமே இதற்கான பதில் கிடைத்துவிட்டது" என பிரதமர் தெரிவித்தார். (அ)

## ஷான் விஜயலால்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட முன்னாள் முதலமைச்சர், பின்னர் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டில், தென் மாகாண சபையின் 16.5 மில்லியன் ரூபா மாகாண சபை உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின் கீழ், மாகாணத்தின் பொதுத் தன்னார்வ சங்கங்களுக்கு நாற்காலிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, முறையான கொள்முதல் நடைமுறைகளை மீறி, குறிப்பிட்ட ஒரு தயாரிப்பு நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து அந்நிறுவனத்திற்கு முறையற்ற இலாபத்தைப் பெற்றுக்கொடுத்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட 16,361 நாற்காலிகளை தென் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 54 மாகாண சபை உறுப்பினர்களின் வீட்டு அலுவலகங்களுக்கு அரச செலவில் கொண்டுசென்று ஒப்படைக்கச் செய்ததன் மூலம், அரசாங்கத்திற்குப் பாரிய நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இயக்குநர் இமயம்...

கடந்த 1977 ஆம் ஆண்டு வெளியான "16 வயதினிலே" திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான பாரதிராஜா, தமிழ் சினிமாவுக்கு புதியதொரு இலக்கணத்தை எழுதினார்.

"கிழக்கே போகும் ரயில்", "சிகப்பு ரோஜாக்கள்", "அலைகள் ஓய்வதில்லை", "முதல் மரியாதை", "கருத்தம்மா" என அவர் இயக்கிய திரைப்படங்களும் தமிழ் சினிமாவின் மைல்கற்களாக அமைந்தன. அவரது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய "பத்மசிறீ" விருது வழங்கி மத்திய அரசு அவரை கௌரவித்தது. இதுதவிர பல தேசிய, மாநில விருதுகளையும் இமயம் பாரதிராஜா பெற்றுள்ளார். பல முன்னணி நட்சத்திரங்களையும், இயக்குநர் களையும் அறிமுகப்படுத்திய அவர், அண்மைக் காலமாக பல்வேறு திரைப்படங்களில் சிறந்த குணச்சித்திர நடிகராகவும் தனது முத்திரையைப் பதித்தார்.

கடந்த சில நாள்களாக கடும் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பாரதிராஜா, நேற்று அதிகாலையில் காலமானார். அவரது மறைவுச் செய்தி திரையுலகினர், ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பலரும் தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர். (அ)

## சங்கீத்ஷனை விடுதலை...

வேண்டாம்!" போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு, ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் தமது எதிர்ப்பை பலமாகப் பதிவு செய்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதாக மக்களுக்குத் தெளிவான வாக்குறுதி அளித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

ஆனால், ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நெருங்கும் நிலையிலும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை எனவும், மாறாக இந்த அரசாங்கத்தின் கீழ் சுமார் 80 பேர் வரை இந்த மிலேச்சத்தனமான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சாடினார். கடந்த காலங்களில் தெற்கில் உரிமைக்காகப் பேசிய சிங்கள மக்களுக்கும், வடக்கில் போராடிய தமிழ் மக்களுக்கும், கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரா கவே இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டிய அவர், தற்போது கிளிநொச்சியில் ஒரு பாடலைப் பாடினார் என்பதற்காக கலைஞர் சங்கீத்ஷன் கைது செய்யப்பட்டுள்ளமை பேச்சு சுதந்திரத்திற்கும் கலை சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்ட மரண அடியாகும் என்றார். (அ)

## ஜனாதிபதியுடன் சிறீதரன்...

காரணமாக சாதா ரண நீதிமன்ற முறைமையின் கீழ் அவருக்கான பிணைக் கோரிக்கையை சட்டத்தரணிகள் ஊடாக விடுக்க முடி யும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சிறித ரன் எம்.பியிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, அமைச்சர் சந்திர சேகருக்கும், சிறீதரன் எம்.பிக்கும் இடையில் பாராளு மன்ற வளாகத்தில் உரையாடலொன்று நடைபெற்றுள் ளது.

அந்த உரையாடலின்போதும், ஜனாதிபதி அநுரவின் அறிவிப்பு தொடர்பில் அமைச்சர் சந்திரசேகர் வெளிப்ப டுத்தியதோடு சங்கீத்சனின் தாயாருடனும் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு உரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# வெளிநாடு செல்லும் பெண் தொழிலாளர்களின் குடும்ப மேம்பாட்டுக்காக 5 வருட விசேட திட்டம்

கொழும்பு, ஜூன். 11

தொழில்வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைத் பெண் தொழிலாளர்களின் குடும்பங்களின் நீண்டகால நலன்புரி மற்றும் நிலையான வளர்ச்சியை இலக்காகக் கொண்டு, ஐந்து வருட விசேட அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

“புலம்பெயர் தொழிலாளர் குடும்ப மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த முறைப்படுத்தப்பட்ட அணுகுமுறை” எனும் பெயரில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு இவ்வாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பங்களில் உள்ள 2 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி குறித்து அவதானம் செலுத்தப்பட்ட போதிலும், அந்தப் குடும்பங்களின் நிலையான அபிவிருத்தி குறித்து இதுவரை போதிய கவனம் செலுத்தப்படவில்லை என அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# ஆடி அமாவாசை தினத்தை பொது விடுமுறையாக்குக!

## ரவிகரன் எம்.பி கோரிக்கை பரிசீலிப்பதாக அரசு பதில்

கொழும்பு, ஜூன். 11

இந்துக்களின் புனித நாளான ஆடி அமாவாசை தினத்தை அரச பொதுவிடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்துமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றக் குழு அறையில் நடைபெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பற்றிய அமைச்சர் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையை உரிய முறையில் பரிசீலித்து, விரைவில் முடிவை அறிவிப்பதாக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி பதிலளித்துள்ளார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் ஓர் புனித நாளாகும். இந்நாளில் இந்துக்கள் தமது முன்னோர்களுக்காக, குறிப்பாக இறந்த தந்தையர்களுக்காக விரதமிருந்து திதி மற்றும் தர்ப்பணம் கொடுத்து தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றி ஆசி பெறுகின்றனர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் இந்துக்களின் புனித நாளான ஆடி அமாவாசை தினத்திற்குப் பொதுவிடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

அதற்கான ஆதாரங்களும் என்னிடம் உள்ளன. இருப்பினும், இந்த நாட்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் முடிவிற்கு வந்த பிற்பாடு இந்த நாளுக்குப் பொது விடுமுறை வழங்கப்படுவதில்லை.

மாதம் தோறும் பௌர்ணமிக்கு விடுமுறை வழங்கும் இலங்கை அரசு, வருடத்தில் ஒரு நாள் வருகின்ற ஆடி அமாவாசைக்கு பொது விடுமுறை வழங்கத் தவறியிருப்பது இந்துக்களுக்குப் பெரும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, இந்துக்கள் தமது புனித நாளில் இடர்பாடுகளின்றி, நிம்மதியாக வழிபாடுகளை மேற்கொள்வதற்காக இதனைப் பொது விடுமுறை நாளாக இலங்கை அரசு பிரகடனப் படுத்த வேண்டும்” என வலியுறுத்தினார்.

அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் பதில்,

இக்கோரிக்கைக்குப் பதிலளித்த புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோர், சமய ரீதியாக இந்த விடயங்களைக் கையாள்வதற்கென விசேட குழு வொன்று இருப்பதாகத் தெரிவித்தனர்.

ஆடி அமாவாசை புனித நாளினை அரச விடுமுறையாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பான விடயம் அந்தக் குழுவிற்குப் பாரப்படுத்தப்பட்டு பரிசீலிக்கப்படும் என்றும், அதன் பின்னர் அக் குழுவின் பரிசீலனை முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# டிஜிற்றல் மயமாகும் ரயில் சேவை!

கொழும்பு, ஜூன். 11

தேசிய டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தின் மற்றுமொரு கட்டமாக, அரச அதிகாரிகளுக்கு சலுகை விலையிலான ரயில் பருவச்சீட்டுகளை வழங்குவதற்கான புதிய இணைய வழி முறைமை நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தலைமையில் இந்த புதிய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புதிய திட்டத்தின்படி, அரச நிறுவனங்கள் தங்களது ஊழியர்களுக்கு சலுகை விலையிலான பருவச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்காக, ரயில் திணைக்களத்தின் டிஜிற்றல் தளத்தில் முதலில் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

ஆரம்ப விழாவில், 35 அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்த பதிவுச் செயல்பாட்டில் கலந்துகொண்டனர்.

சலுகை விலை ரயில் பருவச்சீட்டுகளைப் பெற விரும்பும் அரச அதிகாரிகள், தத்தமது நிறுவனங்களின் அது தொடர்பான விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்புடன், “பிரவேஷ” கைபேசி செயலி மூலமாகவோ அல்லது www.pravesha.lk என்ற இணையத்தளம் ஊடாகவோ பதிவு செய்துகொள்ள முடியும்.

இவ்வாறு பதிவு செய்துகொள்ளும் அதிகாரிகள், எதிர்வரும் ஜூலை மாதத்துக்கான பருவச்சீட்டுகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலங்கை ரயில் திணைக்களம் மற்றும் மேல் கொழும்பு ரயில் திட்டம் ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இந்த வேலைத்திட்டமானது நாட்டின் டிஜிற்றல் மயமாக்கல் இலக்கை அடைவதற்கு வழிவகுப்பதுடன், ரயில் சேவையின் வினைத்திறன், சேவையின் தரம் மற்றும் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் என அதிகாரிகள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (அ)

# ஆசியாவின் மோசடி வலையமைப்புகளுக்கு ஒரு புதிய தளமாக உருவெடுக்கும் இலங்கை

கொழும்பு, ஜூன். 11

கம்போடியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் கடுமையான சோதனைகள் காரணமாக, சர்வதேச இணையவழி மோசடி கும்பல்கள் இலங்கையிலுள்ள கடற்கரை விடுதிகள் மற்றும் அலுவலகக் கட்டடங்களை நோக்கி தங்களது செயல்பாடுகளை மாற்றி வருவதாக புலனாய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் இந்த குற்றவியல் தொழிலின் அடுத்த கட்டமாக இது பார்க்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள விசா இல்லாத பயண வசதி, தேவையான கட்டட இடவசதிகள், ஒப்பீட்டளவில் வலுவான தொலைத்தொடர்பு வலையமைப்புகள் மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட முறைசாரா பணப்பரிமாற்ற அமைப்பு (உண்டியல் முறைமை) போன்ற காரணிகளே, மோசடி கும்பல்களுக்கு இலங்கை ஒரு சாதகமான நாடாக மாறுவதற்குக் காரணம் என்று புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த புதிய இணையவழி குற்றப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மட்டும், சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடும் மேற்கு கடற்கரைப் பகுதிகள் மற்றும் தலைநகர் கொழும்பில் 1,000 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“இந்த விவகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக காவல்துறை, குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் மத்திய வங்கி ஆகியன ஒன்றிணைந்து கூட்டு முயற்சியாக செயல்பட்டு வருகின்றன” என உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் பேச்சாளர் பிரெட்ரிக் வூட்லர் தெரிவித்துள்ளார்.

அதிநவீன தொழில்நுட்பத்துடன் வேகமாக இயங்கும் இந்த மோசடி கும்பல்களைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு மிகக் குறுகிய கால அவகாசமே உள்ளதாக அவதானிப்பாளர்கள் எச்சரிக்கின்றனர்.

“இலங்கையில் சட்டங்களை அமுல்படுத்துவதில் சில சிக்கல்கள் உள்ளன. நாம் இந்த நிறுவனங்களுக்கு எதிராக போதிய நெருக்குதல்களைக் கொடுப்பதில்லை அவர்கள் வெறுமனே சுற்றுலா விசாக்களைப் பயன்படுத்தியே இங்கு தங்கியிருக்கிறார்கள்.” என இலங்கையின் புலனாய்வு அறிக்கைக்கான மையத்தின் பணிப்பாளர் தில்ருக்ஷி ஹந்துந்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு வளாகத்தில் பொலிஸ் நடத்திய சோதனையில், இணையவழி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 150 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் கண்டறியப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, கொழும்புக்கு அருகிலுள்ள பல மாடி அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையில் மேலும் 120 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரின் நெருக்குதல்கள் அதிகரித்து வருவதால், இந்த கும்பல்கள் பெரிய வளாகங்களில் இருந்து, விரைவாக வாடகைக்கு எடுத்துவிட்டு உடனே வெளியேறக்கூடிய விருந்தகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அலுவலக இடங்களுக்கு தங்களது உத்திகளை மாற்றி வருகின்றன.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்க பாராளுமன்றக் குழு வெளியிட்ட அறிக்கையொன்றில், பலவீனமான சட்ட அமுலாக்கத்தையும் வலுவான டிஜிற்றல் உள்கட்டமைப்பையும் கொண்ட “நெறிமுறை அழுத்தங்களுக்கு” உள்ளாகும் நாடுகளை நோக்கி இந்த மோசடி வலையமைப்புகள் நகர்வதாக எச்சரித்திருந்தது.

இலங்கையில் உள்ள இத்தகைய சந்தேகத்திற்கிடமான மையங்களில், தென்கிழக்கு ஆசிய மோசடி மையங்களில் இருந்து தப்பியவர்கள் பணியாற்றக்கூடும் என்று மோசடி புலனாய்வாளர்கள் கருதுகின்றனர். மாற்று வேலை வாய்ப்புகள் இல்லாததால், அவர்கள் தங்களது முந்தைய அனுபவங்களை இங்கு பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. (அ)

# அதிபர் சேவை அதிகாரிகளின் ஆரம்ப வேதனத்தில் திருத்தம்

கொழும்பு, ஜூன். 11

இலங்கை அதிபர் சேவையில் உள்ள அதிகாரிகளின் ஆரம்ப வேதனம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன் இது தொடர்பான புதிய சுற்றறிக்கை (எண் 03/2014 (I)) வெளியிடப்பட்டுள்ளது.

இது முன்னைய 03/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் முதலாவது பகுதியையும் அதன் உப பிரிவுகளையும் மாற்றியமைத்துள்ளது. கடந்த மே 11, 2026 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அனுமதி பெறப்பட்டது.

நீண்டகாலமாக அதிபர்களால் முன்வைக்கப்பட்டு வந்த வேதன முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில், அதிபர்களின் சம்பளம் பதவி உயர்வு அடிப்படையில் கணக்கிடப்படும். இலங்கை அதிபர் சேவையின் தரம் III-க்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரிகள், தரம் I வரை பதவி உயர்வு பெறுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்வதற்காக விசேட சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்வதற்கு அதிபர்களுக்கு 2027 டிசம்பர் 31 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சேவை அமைப்பின் விதிகளுக்கு அமையவும், பதவி உயர்வுச் செயல்பாட்டில் அதிபர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கிலும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org